## முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

## O.S.No.252/2013

2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 3ம் தேதியன்று **DW.1** ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருஞானம் | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் 26ம் பிரதிவாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு சான்றாவணங்களாக 1972 ல் என்.பி.ஏ சுப்பிராயபிள்ளை மற்றும் என்.பி.ஏ சண்முகம்பிள்ளை ஆகியோருக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவின பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பிவாசாஆ 1**. அதே வருடத்தில் பி.எஸ்.எண். 589/1 புஞ்சை ஏக்கர் 0.39 ½ சென்ட் என்.பி.ஏ சுப்பிராயபிள்ளை மற்றும் என்.பி.ஏ சண்முகம்பிள்ளை ஆகியோர் சேர்ந்து சந்திரசேகரன் என்பவருக்கு விற்பனை செய்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **பிவாசாஆ 2.** பி எஸ் எண்.589/1 க்கான புல வரைபடம் **பிவாசாஆ 3 (வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது**). 25.1.95 பிரதிவாதி லட்சுமிக்கும் மற்றும் பலருக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவின பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பிவாசாஆ 4**. 7.11.2007 ல் 9ம் பிரதிவாதி சிவக்குமார் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல்

**பிவாசாஆ** 5. 2007 வரை என் தந்தை கருப்பணன் நகராட்சிக்கு செலுத்திய வரி ரசீது **பிவாசாஆ** 6. பி எஸ் எண் 3 க எண் 598 599 க்கான டவுன் சர்வே ஆவணம் அசல் **பிவாசாஆ** 7. சொத்து வரி கேட்பு ஆவணத்தின் Extract நகல் **பிவாசாஆ** 8 (**வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது**). பட்டா 726 ன் ஆவணம் **பிவாசாஆ** 9. 1.1.1987 முதல் 15.8.2011 வரையிலான வில்லங்க சான்றிதழ் சான்றிட்ட நகல் **பிவாசாஆ** 10. எனக்கு வந்த RTI மூலம் கொடுத்த பதில் **பிவாசாஆ** 11. கே பி சண்முகம்பிள்ளையின் வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் **பிவாசாஆ** 12. என் தந்தை கருப்பணன் இறப்பு சான்றிதழ் அசல் **பிவாசாஆ** 13. என் தந்தை கருப்பணன் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் **பிவாசாஆ** 14. ஈரோடு செயல் அலுவலர் RTI மூலம் நான் கேட்ட கேள்விக்கு அனுப்பிய பதில் **பிவாசாஆ** 15 ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன்.